| | |
|---|---|
| மையம் : ______________________ | பெயர்: ______________________ |
| | பதிவு எண்: ______________________ |
| மேற்பார்வையாளர் கையொப்பம்: ______________________ | நாள் : ______________________ |

# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025

## இடைநிலை (BM00) – எழுத்துத் தேர்வு
## ஜனவரி–பிப்ரவரி 2025

**நேரம் : 1.30 மணி நேரம்** **மதிப்பெண் : 75**

**I. பின்வரும் கருத்துகள் சரி அல்லது தவறு என்று குறிப்பிடுக.**
*Mention the following statements are True or False.* ***(5x1=5)***

1. கடற்கரை கோவில் கருங்கற்களால் கட்டப்பட்டது. Oசரி Oதவறு
2. மாறனின் மனைவி மணிமேகலை. Oசரி Oதவறு
3. தக்காளியின் நிறம் நீலம். Oசரி Oதவறு
4. தமிழர் திருநாள் பொங்கல். Oசரி Oதவறு
5. பாரதியாரின் நூல்களுள் ஒன்று குயில்பாட்டு. Oசரி Oதவறு

**II. அ. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களைக் கொடுக்கப்பட்டுள்ள சொற்பட்டியலில் இருந்து தேர்ந்தெடுத்து எழுதுக. (5x1=5)**
*Select and write the correct English words for the following Tamil words from the list given below.*

**(morning, night, name, rooms, we)**

1. அறைகள் – ______________________
2. பெயர் – ______________________
3. இரவு – ______________________
4. நாங்கள் – ______________________
5. காலை – ______________________

**ஆ. பின்வரும் சொற்களின் எதிர்ச்சொற்களைக் கொடுக்கப்பட்டுள்ள சொற்பட்டியலில் இருந்து தேர்ந்தெடுத்து எழுதுக. (5x1=5)**

*Select and write the correct opposites for the following words from the list given below.*

**( பகைவன், சில, நில், மெய், வேண்டும்)**

1. பொய் x ____________________
2. ஓடு x ____________________
3. வேண்டாம் x ____________________
4. பல x ____________________
5. நண்பன் x ____________________

**III. பின்வரும் சொற்களைத் தகுந்த சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

*Write meaningful sentences with the following words.* *(5x2=10)*

1. ஆடை 2. இனிப்பு 3. ஆசிரியர் 4. பாட்டு 5. இந்தியா

1. ____________________________________________________

____________________________________________________

2. ____________________________________________________

____________________________________________________

3. ____________________________________________________

____________________________________________________

4. ____________________________________________________

____________________________________________________

5. ____________________________________________________

____________________________________________________

## பகுதி – 2

**I. பின்வரும் பத்தியைப் படித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக. (5x2=10)**

*Read the following paragraph and answer each question given below in a sentence.*

மாதவன் 5 மணிக்கு எழுந்திருப்பார். 5.30 மணி முதல் 6 மணி வரை உடற்பயிற்சி செய்வார். மாதவன் பல்கலைக்கழகத்தில் காலை 10 மணியிலிருந்து 4 மணி வரை மாணவர்களுக்குப் பாடம் நடத்துவார். மாலை 4.30 மணிக்கு 27L பேருந்தில் வீட்டுக்கு வருவார். இரவு ஒரு மணி நேரம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பார். பின்னர் 10 மணிக்குத் தூங்குவார்.

**வினாக்கள் :**

1. மாதவன் எத்தனை மணிக்கு எழுந்திருப்பார்?
2. மாதவனின் உடற்பயிற்சி நேரம்?
3. மாணவர்களுக்குப் பாடம் நடத்துவது யார்?
4. மாதவன் எந்த எண் பேருந்தில் வீட்டுக்கு வருவார்?
5. மாதவன் எத்தனை மணி நேரம் தொலைக்காட்சி பார்ப்பார்?

1. ____________________________________________________________

____________________________________________________________

2. ____________________________________________________________

____________________________________________________________

3. ____________________________________________________________

____________________________________________________________

4. ____________________________________________________________

____________________________________________________________

5. ____________________________________________________________

____________________________________________________________

**II.** **பின்வரும் தொடர்களில் முறை மாறியுள்ள சொற்களை முறைப்படுத்திப் பொருளுடைய சொற்றொடர்களை உருவாக்குக.**

*Rearrange the disordered words to form meaningful sentences.* *(5x2=10)*

1. தமிழர்கள் நாள் மூன்று பொங்கலைக் கொண்டாடுவார்கள்

   ____________________________________________________________

2. மின்சாரத்துறையில் கொண்டு நான் பணியாற்றிக் இருக்கிறேன்

   ____________________________________________________________

3. நாட்டுப்புறக் வடிவேலு கலைஞர் ஒரு

   ____________________________________________________________

4. காவிரியாற்றின் ஆட்டனத்தியைக் வெள்ளம் ஒதுக்கியது கரையில்

   ____________________________________________________________

5. மன்னன் சிறப்பு சோழ மிக்க கரிகாலன்

   ____________________________________________________________

**III.** **முறை மாறியுள்ள தொடர்களைச் சரியான அமைப்பு வரிசையில் அமைக்க.**

*Rearrange the following sentences to make the passage meaningful.* ***(5x2=10)***

1. இவர் மின்சாரத்துறையில் பணியாற்றுகிறார்
2. பழநி குடும்பம் மகிழ்ச்சியான குடும்பம்
3. பழனி மனைவி ஒரு பேராசிரியை
4. பழநிக்கு இரண்டு குழந்தைகள்.
5. இவர் பெயர் பழனி

1. ____________________________________________________________

   ____________________________________________________________

2. ____________________________________________________________

   ____________________________________________________________

3. ------------------------------------------------------------------

------------------------------------------------------------------

4. ------------------------------------------------------------------

------------------------------------------------------------------

5. ------------------------------------------------------------------

------------------------------------------------------------------

**IV. இரண்டு வாக்கியங்களைப் பொருள் மாறாமல் ஒன்றாக்குக.**

*Make the two sentences into one without changing the meaning.* ***(5x1=5)***

**எ.கா. : நாம் வெள்ளரிப்பிஞ்சு வாங்கலாம்.**
**இளநீர் குடிக்கலாம்.**

**விடை : நாம் வெள்ளரிப் பிஞ்சு வாங்காவிட்டால் இளநீர் குடிக்கலாம்.**

1. ஆசிரியர் பாடம் நடத்தினார்.
   மாணவர்கள் பாடம் படித்தனர்.

------------------------------------------------------------------

2. நான் மருத்துவப் படிப்புப் படிக்கிறேன்
   நான் சிறந்த மருத்துவர் ஆவேன்

------------------------------------------------------------------

3. நாம் சத்துள்ள உணவை உண்ண வேண்டும்.
   நாம் சரிவிகித உணவை உண்ண வேண்டும்.

------------------------------------------------------------------

4. மயில் ஒரு பறவை.
   மயில் ஒரு தேசியப்பறவை.

------------------------------------------------------------------

5. சிங்கம் ஒரு காட்டு விலங்கு.
சிங்கம் விலங்குகளின் அரசன்.

_______________________________________________________________

**V. பின்வரும் கோடிட்ட இடங்களை அடைப்புக் குறிக்குள் உள்ள பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

*Fill in the blanks with suitable words from the brackets.* ***(5x1=5)***

1. வாணி மாம்பழம் __________________ (வாங்குகிறாள்/ உடைக்கிறாள்)
2. திராட்சைப் பழம் __________________ (இனிக்கிறது / கசக்கிறது)
3. நிலத்தின் அடியில் கிழங்கு __________________ (விளைகிறது/ விலைகிறது)
4. கங்காரு ___________ விலங்கு (கனடா / ஆஸ்திரேலியா)
5. கட்டடக்கலைக்குச் சிறந்தது __________________(மாமல்லபுரம்/மாமண்டூர்)

**VI. பின்வரும் கோடிட்ட இடங்களை எடுத்துக்காட்டில் குறிப்பிட்டுள்ள முறையில் நிரப்புக.**

*Fill in the blanks as indicated in the example.* ***(5x1=5)***

**(எ.கா)** : இப்பொழுது நான் அவசரமாக __________________ (எழுது)

இப்பொழுது நான் அவரமாக **எழுதுகிறேன்.**

1. மஞ்சு விரட்டு தமிழர்களின் வீர _____________ (விளை)
2. மஞ்சள் துண்டில் பணம் _________________ (வை)
3. மாதவன் காலையில் _______________ (எழு)
4. என் தம்பி திருச்சியில்__________________ (இரு)
5. நான் ஆசிரியராகப் __________________ (பணி)

**VII. இடப்புறத்தில் கொடுத்துள்ளவற்றிற்குத் தகுந்தவற்றை வலப்புறத்திலிருந்து தேர்ந்தெடுத்துப் பொருத்துக.** **(5x1=5)**

*Match the corresponding words given on the right with the words given on the left.*

| | | | |
|---|---|---|---|
| 1. எட்டயபுரம் | – | இலிங்க வடிவம் | _____________ |
| 2. இராசராச சோழன் | – | விருந்து | _____________ |
| 3. முல்லா | – | இரதம் | _____________ |
| 4. சிவபெருமான் | – | தஞ்சாவூர் | _____________ |
| 5. பஞ்ச பாண்டவர் | – | பாரதியார் | _____________ |

************

# இடைநிலை (BM00) – இணையவழித் தேர்வு

<u>நேரம் : 1.00 மணி நேரம் மதிப்பெண் : 50</u>

**I. பின்வரும் கோடிட்ட இடங்களை அடைப்புக் குறிக்குள் கொடுக்கப் பட்டிருக்கும் சரியான சொற்களைத் தேர்வு செய்து நிரப்புக. (5x1=5)**

*Fill in the blanks with the correct words selected from the brackets.*

1. __________________ விலங்குகளில் பெரியது . (மான்/ யானை)
2. __________ தேசியப்பறவை . (காகம்/மயில்)
3. சாமந்திப்பூ _____________ நிறம் (பச்சை/மஞ்சள்)
4. _____________ ஆஸ்திரேலியா விலங்கு. (கங்காரு/முயல்)
5. கொடியில் காய்ப்பது _____________. (மாம்பழம்/திராட்சை)

**II. பின்வரும் கோடிட்ட இடங்களை அடைப்புக் குறிக்குள் கொடுக்கப் பட்டவற்றிலிருந்து சரியான சொல்லைத் தேர்வு செய்து நிரப்புக. (5x1=5)**

*Fill in the blanks with the correct words selected from the brackets.*

1. பாரி கடைக்குப் __________________ (போகிறான்/போகிறோம்)
2. வாணி பூக்கள் ________________ (வாங்குவாள்/வாங்கினார்கள்)
3. அவள் சிங்கப்பூரில் __________________ (இருப்பார்கள்/இருக்கிறாள்)
4. நீ வீட்டிற்கு _____________. (வா/ வந்தார்கள்)
5. _______________ பாண்டியன் இருக்கிறான். (வீடு/வீட்டினுள்)

**III. பின்வரும் கோடிட்ட இடங்களை அடைப்புக் குறிக்குள் கொடுக்கப் பட்டவற்றிலிருந்து சரியான சொல்லைத் தேர்வு செய்து நிரப்புக.**

*Fill in the blanks with the correct word selected from the brackets. (5x1=5)*

1. எனக்கு இரண்டு அறைகள்________________ (வேண்டுகிறது/வேண்டாம்)
2. மாறனுக்குச் சைவ சாப்பாடு _____________ (பிடிக்காதா/பிடிக்காதே)
3. என் தங்கை____________ இருக்கிறாள் (திருச்சியில்/திருச்சி)
4. காலையில் சாப்பாடு ______________ (வேண்டுகிறார்கள் / வேண்டும்)
5. இளைஞர்கள் காளைகளை______________. (அடக்கு / அடக்குகிறார்கள்)

**IV. பின்வரும் கோடிட்ட இடங்களை அடைப்புக் குறிக்குள் கொடுக்கப் பட்டவற்றிலிருந்து சரியான சொல்லைத் தேர்வு செய்து நிரப்புக.**

*Fill in the blanks with the correct word selected from the brackets.* ***(5x1=5)***

1. என் சித்தியின் ___________ மாலதி (பெயர்/பயிர்)
2. அரும்பு __________________பாடுகிறாள் (பட்டு/பாட்டு)
3. எங்கள் ___________ஆறு பேர் இருக்கிறார்கள். (குடும்பத்தில்/குடும்பம்)
4. கோயில் __________________ உயரம் 216 அடி.(கோபுரம்/கோபுரத்திற்கு)
5. பாரதியார் ஒரு தேசியக் __________________ (காவி/கவி)

**V. பின்வரும் தொடர்கள் சரி அல்லது தவறு என்று குறிப்பிடுக.**

*Mention the following statements are True or False.* ***(5x1=5)***

1. பெரிய கோவிலைக் கட்டியவர் இராசராச சோழன். ○சரி ○தவறு
2. பொங்கலன்று பொங்கலை நிலவுக்குப் படைக்கிறார்கள். ○சரி ○தவறு
3. முல்லா கோபமாகப் பேசுவதில் வல்லவர். ○சரி ○தவறு
4. கரும்பு கசக்கும். ○சரி ○தவறு
5. தமிழர் திருநாள் இரம்சான். ○சரி ○தவறு

**VI. பின்வருவனவற்றிற்குச் சரியான விடையைத் தேர்வு செய்து வட்டத்திற்குள் ✓ குறி இடுக.** **(5x1=5)**

*Choose and ✓ tick the correct answer from the following.*

1. _______ இலிங்க வடிவில் இருப்பார்.
   - ○ முருகன்
   - ○ திருமால்
   - ○ சிவன்

2. முல்லா ________________ பேசுவார்.
   - ○ கோபமாக
   - ○ நகைச்சுவையாக
   - ○ மெதுவாக

3. அலைகள் ________________ வரும்.
   - ○ வேகமாய்
   - ○ மெதுவாய்
   - ○ பலமாய்

4. இரண்டாம் நாள் கொண்டாடும் பொங்கல் ___________

- ◯ போகி
- ◯ காணும்பொங்கல்
- ◯ மாட்டுப்பொங்கல்

5. மாமல்லபுரம் சிறந்த ____ புகழ்பெற்றது.

- ◯ சிற்பங்களுக்குப்
- ◯ கட்டிடங்களுக்குப்
- ◯ ஓவியத்திற்குப்

**VII. அ. இடப்புறம் கொடுத்துள்ளவற்றிற்குத் தகுந்தவற்றை வலப்புறத்தில் இருந்து தேர்வு செய்து பொருத்துக.** (2x5=10)

*Match the corresponding words given on the right with the words given on the left.*

1.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிலப்பதிகாரம் | – ஆடலில் சிறந்தவள் | ___________ |
| 2. | கண்ணகி | – பொங்கல் | ___________ |
| 3. | மாதவி | – மன்னன் | ___________ |
| 4. | மன்னன் | – இளங்கோவடிகள் | ___________ |
| 5. | கதிரவன் | – பாண்டியன் | ___________ |

2.

| | | | |
|---|---|---|---|
| 1. | பஞ்சபாண்டவர் | – பொங்கல் | ___________ |
| 2. | பாரதியார் பாடல்கள் | – பழைய ஆடை | ___________ |
| 3. | புத்தரிசி | – தேசிய உணர்வு | ___________ |
| 4. | முல்லா | – நாட்டுப்புற நடனம் | ___________ |
| 5. | கரகாட்டம் | – திரௌபதி | ___________ |

**ஆ. இடப்புறத்தில் கொடுத்துள்ள தமிழ்ச் சொல்லுக்கு உரிய ஆங்கிலப் பொருளை வலப்புறத்திலிருந்து தேர்வு செய்து பொருத்துக.** (5x1=5)

*Match the Tamil word given on the left with the corresponding English meaning given on the right.*

| | | | |
|---|---|---|---|
| 1. பழம் | – | flower | ___________ |
| 2. காய் | – | animal | ___________ |
| 3. பறவை | – | fruit | ___________ |
| 4. விலங்கு | – | bird | ___________ |
| 5. பூ | – | vegetable | ___________ |

**இ.** **இடப்புறத்தில் கொடுத்துள்ளவற்றிற்குத் தகுந்த எதிர்ச் சொற்களை வலப்புறத்திலிருந்து தேர்வு செய்து பொருத்துக.** **(5x1=5)**

*Match the corresponding opposites given on the right for the words given on the left.*

***(5x1=5)***

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வேண்டும் | x | நெட்டை | ___________ |
| 2. | இல்லை | x | நில் | ___________ |
| 3. | ஓடு | x | வேண்டாம் | ___________ |
| 4. | பள்ளம் | x | உண்டு | ___________ |
| 5. | குட்டை | x | மேடு | ___________ |

*****